## IV. ஆளணி

ஆட்சியாளர் திரு. டி. டபிள்யூ. இராஜபத்திரன, ரோக்கியோவில் நடந்த தென் கிழக்கு ஆசிய, நியூசீலாந்து, அவுஸ்திரேலிய மகாவங்கி ஆட்சியாளரின் மகாநாட்டில் கலந்துகொள்ள, ஜப்பான் வங்கி ஆட்சியாளரின் அழைப்பிற்கு இணங்கி, 1961ம் ஆண்டு, சித்திரை முதலாம் திகதி இலங்கையிலிருந்து ஜப்பானுக்கு புறப்பட்டு, 1961ம் ஆண்டு சித்திரை 19ம் திகதி இலங்கை திரும்பினர். அவர் சர்வதேச நாணய சபையினதும், சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும் ஆட்சியாளர்கள் சபைகளினது வருடாந்தக்கூட்டங்களிற் பங்கு பெறுவதற்கு 1961ம் ஆண்டு, புரட்டாதி 12ல் வியன்னுவிற்கு புறப்பட்டு, 1961ம் ஆண்டு, ஐப்பசி 3ம் திகதி இலங்கை திரும்பினர். பாக்கிஸ்தானில் உத்தியோகபூர்வமான சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக, பாக்கிஸ்தான் தேசிய வங்கியின் ஆட்சியாளரின் அழைப்பிற்கிணங்கி திரு. இராஜபத்திரன 1961ம் ஆண்டு கார்த்திகை 3-ம் திகதி இலங்கையிலிருந்து பாக்கிஸ்தானுக்கு புறப்பட்டார். அவர் 1961ம் ஆண்டு, கார்த்திகை 14ம் திகதி இலங்கை திரும்பினர்.

நிதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும், நாணயச் சபையில் அரசாங்க அங்கத்துவருமான திரு. எஸ். எப். அமரசிங்க ஓ.பி.ஈ., 1961ம் ஆண்டின் நடுப்பகுதியில் இளைப்பாறினர். நிதி அமைச்சின் தற்காலிக நிரந்தரக்காரியதரிசியாக நியமிக்கப்பட்ட திரு. எச். எஸ். அமரசிங்க நாணயச் சபையின் அரசாங்க அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

ஆட்சியாளர்களுக்கு உதவியாளரான திரு. டீ. சி. குணசேகர ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 16வது கூட்டத்தொடர்ச்சிக்கு இலங்கைத் தூது கோஷ்டியின் ஒரு அங்கத்தவராக பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்டார். கூட்டத் தொடர்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அவர் 1961ம் ஆண்டு புரட்டாதி 15ல் இலங்கையிலிருந்து நியூயோர்க்கிற்குப் புறப்பட்டு 1961ம் ஆண்டு, மார்கழி 30ம் திகதி இலங்கை திரும்பினர்.

பொருளாதார ஆராய்ச்சிப் பகுதியின் தற்காலிக இயக்குநராக இருந்த டாக்டர் காமினி கொறியா, 1961ம் ஆண்டு, தை 1ம் திகதி முதல் பொருளாதார ஆராய்ச்சிப் பகுதி இயக்குநராக நியமிக்கப்பட்டார். ஆசியாவினதும் தூரக்கிழக்குத் தேசங்களினதும் பொருளாதார ஆலோசனை சபையின் வேண்டுகோளுக்கிணங்க டாக்டர் கொறியா உபந்நியாசங்கள் நிகழ்த்தியதுடன், 1961, கார்த்திகை 20-ம் திகதி முதல் 1961 மார்கழி 15ம் திகதிவரை இந்தியாவிலுள்ள, ஜெய்ப்பூரில் "வர்த்தக அபிவிருத்தி" சம்பந்தமாக நடைபெற்ற பிரதேசமகாநாட்டின் விவாதத்திலும் கலந்துகொண்டார்.